பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஞூ பங்குனி ௴ 29 உ வெள்ளிக்கிழமை [12-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 130

# திருமலை கரையோரங்களில் சிங்கள மீனவர் குடியேற்றம்

## அரசு முழு மூச்சில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 12

திருகோணமலை மாவட்டத்தைச் சிங்களப் பிரதேசமாக மாற்றும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக திருகோணமலைக் கரையோரப் பகுதி எங்கும் சிங்கள மீனவர்கள் வெகு வேகமாகக் குடியேற்றப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசின் பல்வேறு அமைச்சுகள் ஒன்றிணைந்து முழு மூச்சாக இந்நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் அறிய வருகிறது.

கடற்றொழில் அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவையே ஒன்றிணைந்து விசேட திட்டங்களைத் தீட்டி இந்நடவடிக்கைகளைச் செயற்படுத்தி வருகின்றன.

★ கரையோரப் பகுதிகளில் புதிய மீனவர் குடியேற்றங்களை உருவாக்குதல்

★ குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் குடியிருப்புகளை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் பரீட்சையில் 17,000 மாணவர் தோற்றுவர்

யாழ்ப்பாணம், ஏப். 12

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் ஏற்பாட்டில் இன்று தமிழீழப் பகுதி எங்கும் நடைபெறவிருக்கும் அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டிப் பரீட்சை 17 ஆயிரம் மாணவர்கள் தோற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காலையும் மாலையும் நடைபெறவிருக்கும் இந்தப் பரீட்சை இருபகுதிகளைக் கொண்டதாகவிருக்கும்.

சொந்தப் பிரதேசம் பற்றிய கேள்விகள் உட்பட பல்வேறு வினாக்கள் முதற் பகுதியில் இடம்பெறும்.

இரண்டாம் பகுதி கட்டுரை வரைதல் சம்பந்தப்பட்டது. அன்னை பூபதி பற்றிய கட்டுரையும் வேறு ஒரு கட்டுரையும் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## திருமலை வாசிகள் 200பேர் முகாம்களில் தடுத்துவைப்பு

திருகோணமலையிலுள்ள அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், பாலையூற்றுப் பகுதிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டு படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தடுத்து வைக்கப்பட்டிருப்போர் படையினரால் சொல்லொணாத் துன்புறுத்தல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களும், முஸ்லிம் ஊர்காவல் படையினரும் தமிழரிடம் கப்பம் கேட்பதாகவும், கொடுக்கத் தவறின் சம்பந்தப்பட்டோர் கைது செய்யப்படுவதாகவும் அறியவருகிறது. [ஓ-15]

## அடம்பன், முருங்கன் நோக்கி இராணுவம் முன்னேற முயற்சி

### மாந்தை, நானாட்டானில் கடும் சண்டை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

மன்னார் நானாட்டான், மாந்தைப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் முன்னேற முற்பட்டபோது அங்கு பெரும் மோதல் ஏற்பட்டது.

மாந்தையில் நின்ற இராணுவத்தினர் நண்பகல் 12 மணியளவில் மூன்று பவள் கவச வாகனங்கள் மற்றும் வேறு இரு கவச வாகனங்கள், ஒரு லொறி ஆகியவை சகிதம் பெரும் எண்ணிக்கையில் அடம்பனை நோக்கி முன்னேற முயன்றனர்.

இரண்டு பொம்மர்கள், அவ்ரோ விமானம் மற்றும் ஹெலிக்கொப்டர்கள் முன்னேற முயன்ற படையினருக்கு உதவியாக வானத் தாக்குதலை நடத்திய வண்ணம் இருந்தன.

முன்னேற முயலும் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் பல முனைகளிலும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இன மோதல்களை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்!

### இந்தியா வற்புறுத்துகிறது

புதுடில்லி, ஏப். 12

“இலங்கையின் வடக்கு, கிழக்கில் இன மோதல்களை நிறுத்தவும் —

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் ஒன்றரைலட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் தமது தாயகத்துக்கு திரும்பக் கூடிய சூழ்நிலையை உருவாக்கவும் விரைவில் நடவடிக்கை எடுங்கள்”

இவ்வாறு இந்தியா கடந்த செவ்வாயன்று இலங்கையை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகர் படையினர் இரவிரவாக பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், ஏப். 12

காரைநகர் படை முகாமில் இருந்தும் கடற்பகுதியில் இருந்தும் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரை தொடர்ச்சியாக ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் கடுமையாக நடந்து கொண்டிருந்த அதே சமயம் படையினர் வெளியேறவும் முற்பட்டனர்.

அப்போது இரு தரப்புகளுக்கும் இடையே கடும் சமர் இடம்பெற்றது. படையினரின் முயற்சி கைகூடவில்லை.

படைத் தரப்புக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து ஏதும் தெரியவரவில்லை. [ஓ-15]

## 2 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப் 12

காரைநகர் கடற்படை முகாம் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டு வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

குட்டி [செல்லையா இராஜேந்திரன்—புத்தூர்], ரகுராம் [பழனிவேல் நந்தவரதன்—அராலி வடக்கு] ஆகியோரே வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்கள் இன்று காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை நவக்கிரி குட்டி பாலர் பாடசாலையில் இதற்கென அமைக்கப்பட்ட மேடையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும். பின்னர் கோப்பாயில் உள்ள மாவீரர் மயானத்திற்கு புகழுடல்கள் எடுத்துச் செல்லப்பட்டு, அக்கினியுடன் சங்கமமாகும். [உ]

## முச்சந்தி முரளி



அப்ப...குடாநாட்டு மக்கள் முக்கால் பட்டினி கிடக்கட்டும் எண்டு யோசிச்சிருக்கினம் போலை......!

## பத்துமாத உணவுத் தேவையில் கால் பங்கே வந்து சேர்ந்தது!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

கடந்த வருடம் ஜூன் மாதத்தில் யுத்தம் ஆரம்பமான பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களில் இருபத்தியைந்து சத வீதத்தை [கால் பங்கை] மட்டுமே அரசாங்கம் அனுப்பி வைத்தது.

வடக்கு — கிழக்கில் யுத்தம் தொடங்கி நேற்றுடன் பத்து மாதங்கள் முடிவடைந்தன. அதனையொட்டி யாழ்ப்பாணம் செயலகத்தில் இருந்து உதயன் திரட்டிய தரவுகள், தகவல்களில் இருந்து இந்த விவரம் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்போது வசிக்கும் மக்களின் மொத்த எண்ணிக்கை சுமார் பத்து லட்சமாகும். யாழ். நிரந்தர வாசிகள், வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ளவர்கள் ஆகிய இரு சாராரையும் சேர்த்த தொகையே இது.

பத்து லட்சம் மக்களினதும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மாதாந்தம் குறைந்த பட்சம் தேவைப்பட்ட மிக அத்தியாவசியமான உணவுப் பொருள்களின் அளவுகளும், அரசிடம் இருந்து யாழ். செயலகத்துக்குக் கிடைத்த அளவுகளும் [மெற்றிக் தொன்னில்] ஒரே பார்வையில் வருமாறு:

| பொருள் | தேவை [தொன்] | வந்தது [தொன்] |
|---|---|---|
| 1. அரிசி | 50,000 | 14,967 |
| 2. மா | 38,000 | 8,741 |
| 3. சீனி | 20,000 | 4,961 |
| 4. பருப்பு | 10,000 | 1,502 |

★ யாழ். மாவட்டத்துக்குக் கிடைத்த பொருள்கள் பத்து மாத காலத்தில் 21 தடவைகள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டவையாகும். [அ-உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைத்தாள்கள் இன்னும் வவுனியாவைச் சேரவில்லை!

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் விசேட பரீட்சையின் விடைத் தாள்கள் இன்னும் வவுனியாவுக்குப் போய்ச் சேரவில்லை என்று நேற்றுத் தகவல்கள் கிடைத்தன.

இந்த விடைத்தாள்களை ''ரெட்பாணா'' தொண்டர் நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் கடந்த வாரம் எடுத்துச் சென்றிருந்தார்.

அந்த நிறுவனத்தின் பிரதிநிதியை மட்டும் வவுனியாவுக்குள் செல்ல அனுமதித்த படையினர் விடைத்தாள்களை அவர் தம்முடன் எடுத்துச் செல்ல சம்மதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் சம்பந்தப்பட்ட பிரதிநிதி தாண்டிக்குளத்தில் காத்திருந்ததாக அறியவந்தது. [ஒ-3]

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு நிதி ஒதுக்கீடு எதுவுமில்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் இந்த வருடம் யாழ். பல்கலைக்கழகத்துக்கு எந்த வித ஒதுக்கீடும் இல்லை.

யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் மேற்கண்ட தகவலை வெளியிட்டன.

மக்களுக்கு நன்மைதரத்தக்க சித்தவைத்திய மருந்தச்சாலை, மகப்பேற்று நிலையம், முயல் வளர்ப்பு, கால் நடைவளர்ப்புப் பண்ணை போன்ற செயற் திட்டங்களுக்கு நிதி உதவி கோரப்பட்டிருந்தது என்றும்-

ஆனால் யாழ்-செயலகம் எந்தவித ஒதுக்கீட்டையும் மேற்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ - 3]

### பேராதனைப் பல்கலைக்கழக

## வெளிவாரிப் பரீட்சைகள் வியாழனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 12

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

முதலாம் ஆண்டு கலைத் தேர்வு, விஞ்ஞானத் தேர்வுப் பரீட்சைகளே நடைபெறவிருக்கின்றன.

இதற்கான அனுமதிப் பத்திரங்கள், மற்றும் பரீட்சை மண்டபங்கள் பற்றிய விவரங்கள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பரீட்சைகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. [உ-3]

## 172 தொகுதிகளில் தி. மு. க. போட்டியிடும்

சென்னை, ஏப். 12

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 172 தொகுதிகளில் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை கழகத்தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி நேற்று செய்தியாளரிடம் வெளியிட்டார்.

எஞ்சியுள்ள தொகுதிகளை தோழமைக் கட்சிகளான ஜனதா தள், இடது சாரி கம்யூனிஸ்ட், வலது சாரி கம்யூனிஸ்ட், திருநாவுக்கரசு தலைமையிலான அ.தி.மு.க.-2 ஆகிய கட்சிகளுடன் பகிர்ந்து கொள்வது சம்பந்தமான பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்தார். [ஒ-எ]

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 12

யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி. ப 2மணிக்கு யாழ். பல.நோ. கூ.சங்க கட்டிட மேல் மாடியில் நடைபெறவுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி வேலாயுதம் தங்கம்மா

புங்குடுதீவு சிவலைப்பிட்டி 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கொல் வேலாயுதத்தின் அன்பு மனைவி தங்கம்மா 11-04-91 இல் காலமானார். இவர் இரத்தினபூபதி, பேபி, கந்தசாமி, சிரோன்மணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற செல்லத்துரை [ஆசிரியர்], கந்தசாமி, பேரின்பம், சிவப்பிரகாசம் ஆகியோரின் மாமியும், காலஞ் சென்ற சோமு, சின்னம்மா ஆகியோரின் சகோதரியும், குணரெத்தினம் [வருமானவரி இலகா, மட்டக்களப்பு] கௌரிதேவி, ஸ்ரீகுகன், ஸ்ரீஈஸ்வரன், ஸ்ரீபகவான், கலாமதி, சுரேஸ்குமார், பாஸ்கரகுமார், குணேஸ்குமார், ஸ்ரீறங்கநாதன், கலாசோதி, கலாரஞ்சி, குகதாசன், உத்தரதாசன், சந்திரதாசன், சிவநிதி, சிவகலா, சிவஜந்தி ஆகியோரின் பேத்தியும், தேவேந்தினி, கமலினிஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 12-4-1991 ஆம்திகதி நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவுமயானத்திற்கு காலை 10-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

சிவலைப்பிட்டி,
4 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

[16417]

# காங்கேசன் சிமெந்து ஆலையை புனரமைக்க ரூ.300 கோடி நிதி

## அதனைத் தெற்கிற்குத் திருப்ப உயர்மட்டம் முயற்சி!

யாழ்ப்பாணம், ஏப். 12

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையைப் புனரமைக்க சுவிஸ் நாட்டு நிறுவனம் ஒன்று வழங்கியிருக்கும் 300 கோடி ரூபாவைத் தென் பகுதியின் சிமெந்து உற்பத்தி அபிவிருத்திக்கு மாற்றுவதற்கு சிமெந்துக் கூட்டுத்தாபன உயரதிகாரிகள் முயற்சி மேற்கொண்டிருப்பதாக அறிய வருகிறது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையைப் புனரமைத்து, உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ''கோல்டர் வாங்'' என்னும் நிறுவனம் இந்த நிதியை வழங்கியுள்ளது.

இந்த நிறுவனத்துக்கு கொழும்பில் தனி அலுவலகம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நிறுவன அதிகாரிகள் கடந்த மாதம் காங்கேசன்துறைக்கு நேரடியாக விஜயம் செய்து தொழிற்சாலைக்கு ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டனர் என்று தெரிய வருகிறது.

சிமெந்துத் தொழிற்சாலையைப் புனரமைக்க வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை பிரஸ்தாப நிறுவனம் மேற்கொண்டுள்ள அதே வேளையில், நிலைமை சீர் இல்லை என்ற காரணத்தைக் காட்டி அந்த நிதியை புத்தளம் மற்றும் காலி சிமெந்துத்தொழிற்சாலைகளுக்கு மாற்ற சிமெந்துக் கூட்டுத்தாபன தலைமைப் பீடம் முயற்சி மேற்கொண்டிருக்கிறது.

''வடக்கு, கிழக்கில் உள்ள சிறுபான்மைமக்களின் பொருளாதார வளர்ச்சிக்காகவே இந்த நிதி வழங்கப்படுவதாகவும், அப்பகுதியில் தான் அதனைச் செலவிட வேண்டும்'' என்றும் சுவிஸ் நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்திருப்பதாக அறிய வருகிறது.

மன்னாரிலும் சிமெந்துத் தொழிற்சாலையொன்றை நிறுவுவது தொடர்பாக இந் நிறுவன அதிகாரிகள் மன்னார் சென்று நிலைமைகளை ஆராய்ந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## குரங்குகள் அட்டகாசம்

தென்மராட்சி, ஏப். 12

மந்துவில் காரைக்காட்டுப் பகுதியில் பயிர் வகைகளை குரங்குகள் நாசம் செய்வதாக அப்பகுதிவிவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கூட்டம் கூட்டமாக வரும் குரங்குகள் வயல்வெளிகளில் உள்ள சிறுதானியப் பயிர்களை அழித்து வருவதாகவும், இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். [உ-117]

## வங்கி விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப். 12

தமிழ், சிங்கள வருடப் பிறப்புக்கான விடுமுறைகள் சனி, ஞயிற்றுக் கிழமைகளில் வருவதனால் வங்கிகள் இன்று வெள்ளி அரைநாளும், எதிர்வரும் திங்கள் முழுநாளும் மூடப்பட்டிருக்கும் என வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-15]

## நேபாளத்தில் பெர்னாட்

புதுடில்லி ஏப் 12

இலங்கை வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்னா நேற்று நேபாளத் தலைநகர் காத்மண்டுவுக்குப் பயணமானார்.

1991 நவம்பரில் கொழும்பில் நடத்தப்படவுள்ள சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு பற்றிய ஏற்பாடுகள் பற்றி நேபாளப் பிரதமருடன் திரு. பெர்னாட் திலகரத்னா பேச்சுக்கள் நடத்துவார்.

சார்க் அமைப்பின் தலைமையகம் காத்மண்டுவில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. [அ-எ]

## சிப்பாய் பலி

வெலிஓயா பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுடன் நடந்த மோதல் ஒன்றில் அரசுப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. [இ-எ]

## வவுனியாவில் ஊரடங்கு நீக்கம்

வவுனியா மாவட்டத்தில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச்சட்டம் நேற்றுக் காலை 10 மணியுடன் நீக்கப் [illegible] [இ-எ]

## இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும்

### பலாலியை அண்டியோருக்கு நாளை

யாழ்ப்பாணம், ஏப். 12

இராணுவ முகாம்களை அண்மித்த பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவாரண உதவிகளை — சுழற்சி முறையில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக வழங்க இருக்கின்றன.

இதன் முதற்கட்டமாக தென் இந்திய திருச்சபை பலாலி இராணுவ முகாமை அண்டிய பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நாளை சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் வைத்து நிவாரண உதவிகளை வழங்க உள்ளது.

மயிலிட்டி தெற்கு யா/248, மயிலிட்டி வடக்கு யா/251, பலாலி மேற்கு யா/256, பலாலி வடக்கு யா/254, கட்டுவன் மேற்கு யா/239 ஆகிய கி. சே. பிரிவுகளுக்கே நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

வாராந்த நிவாரணம் பெறுபவர்கள் மேற்கண்ட நிவாரணத்தைப் பெறத் தகுதியற்றவர்கள் என்றும், நிவாரணம் பெறத் தகுதியுடையோர் பங்கீட்டு அட்டை மூலம் தமது தகுதியை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## அதிக குழந்தை பெற்றால் அதிகாரிகளே பொறுப்பு!

பீகிங், ஏப்ரல் 12

ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை என்ற கட்டுப்பாட்டை மீறி மக்கள் அதிக குழந்தைகளைப் பெற்றால் அந்தந்தப் பகுதி கம்யூனிஸ்ட் கட்சி அலுவலர்களே அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

இப்படி சீன அரசு அறிவித்துள்ளது.

பிறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்துவதில் காணப்படும் முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்தே அந்தந்தப் பகுதி கம்யூனிஸ்ட் கட்சி அலுவலர்களின் அரசியல் வளர்ச்சி அமையும் என்று சீனப் பிரதமர் லீ பெங் தெரிவித்திருக்கிறார்.

சீனாவின் தற்போதைய சனத்தொகை 114 கோடியாக அதிகரித்துள்ளது.

ஆண்டுதோறும் ஒரு கோடி 60 லட்சம் பேரினால் சீனாவின் சனத்தொகை அதிகரித்து வருகிறது. [இ-எ]

## ஆபத்து அலவன்ஸ்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர்களுக்கு ஆபத்து அலவன்ஸ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. [இ - 126]

### சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதன வரி இறுப்பாளர்களுக்கு

## ஒரு விசேட அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் உள்ள ஆதனங்களுக்குரிய 1991ஆம் ஆண்டு 1ஆம் கந்தாயத்திற்கான தொகைக்கு தண்ட அறவீடு எதுவுமின்றி 30-4-91 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரை செலுத்துவதற்கு கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 1991ஆம் ஆண்டு 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயத்திற்கான தொகைகளை இக்காலப் பகுதிக்குள் செலுத்துபவர்களுக்கு 5% வரிக்கழிவு வழங்கப்படும்.

எனவே, சகல ஆதனச் சொந்தக்காரர்களும் இச்சலுகையைப் பயன்படுத்தி 30-4-91க்கு முன் தமது ஆதன நிலுவைகளைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் [15%] ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் [20%] கூடுதலாக அறவிடப்படும் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.

[சி/5949]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 48 ஏக்கரில்

# நல்லின விதை நெல் உற்பத்தி

## வடபகுதி விவசாயிகள் தெற்கை எதிர்பார்க்க தேவையில்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

வடமாகாண விவசாயிகளுக்குத் தேவையான நல்லின விதை நெல் இனி கிளிநொச்சியில் இருந்தே பெறப்படும். இதுவரை கண்டி விவசாய ஆராய்ச்சி நிலையமே இவற்றை வழங்கி வந்தது.

இந்த நல்லின நெல் தற்போது கிளிநொச்சியில் 48 ஏக்கர் நிலத்தில் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் விதைக்கப்பட்டுள்ளது.

இதில் இருந்து பெறப்படும் விதை நெல் கமநலசேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையம் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட இந்த நெல் இனம் வட பகுதியின் காலநிலைக்கு ஏற்ப குறுகிய காலத்தில் கூடிய விளைச்சலைத் தரக்கூடியது என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-3]


## கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.

A/L 92 புதிய பிரிவு

A/L 91 மீட்டல் வினா-விடை வகுப்பு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| கணக்கியல் | — | திரு. சௌந்தி |
| இந்துநாகரிகம் | — | திருமதி கிருஷ்ணா |
| புவியியல் | — | திரு யோசப் |

ஆரம்பம்:- 13 - 04 - 1991

9-00 a m

★ பொருளியல் மீட்டல் வினா - விடை

[சி/4828]　　சனி 5-00 p. m.


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை.

## பொதுப்பட்டமளிப்பு-1990

டிப்ளோமாக்கள்/பட்டங்கள்/பட்டப்படிப்பின் டிப்ளோமாக்கள்/முதுமாணி/கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1991 ஆடி மாதம் ஆறாம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 1991 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு
2. முது தத்துவமாணித்தேர்வு
3. முது கலைமாணித்தேர்வு
4. முது விஞ்ஞானமாணித்தேர்வு
5. கல்விப்பட்டப்படிப்பின் டிப்ளோமாத் தேர்வு 1989
6. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி தேர்வு 1989/90
7. பொதுக்கலைமாணித் தேர்வு 1989
8. பொது விஞ்ஞானமாணித்தேர்வு 1989
9. சங்கீதம்/பரதநாட்டியம் டிப்ளோமாத் தேர்வு 1989
10. சிறப்பு விஞ்ஞானமாணித் தேர்வு 1989
11. வணிகமாணித்தேர்வு 1989
12. தொழில் நிர்வாகமாணித் தேர்வு 1989
13. சிறப்பு கலைமாணித்தேர்வு 1988
14. சித்த வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித் தேர்வு

விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வேண்டுகோட் படிவங்களையும், மற்றும் விபரங்களையும், முத்திரை ஒட்டிய 23x10 செ. மீற்றர் அளவுடைய, சுய முகவரியிட்ட கடித உறையை உபபதிவாளர்/தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்.

[சி/5944]

## உணவு நிறுத்தம்

தென்மராட்சி, ஏப்ரல் 12

பளை வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவு கடந்த வாரம் முதல் திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

[இ 117]

## ஆலடிச் சந்தியில் நினைவாலயம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப் 12

கரும்புலி கப்டன் தாடி சிறி அண்ணா, மேஜர் கபாஸ், லெப். கரன், லெப. அல்பேட் ஆகிய வீரவேங்கைகளின் நினைவாலயத் திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்கு திருநெல்வேலி ஆலடிச் சந்தியில் இடம்பெறும்.

தேசமீட்புக்காக இவர்கள் எடுத்துச் சென்ற குண்டு மோசம் செய்ததால் 1989-4-14 இல் இவர்கள் நால்வரும் ஆலடிச் சந்தியில் வீர மரணமடைந்திருந்தனர்.

[இ-த]

## யாழ். மாநகரசபை ஊழியர் சம்பளம்

யாழ் மாநகரசபை ஊழியர்களுக்கான ஏப்ரல் மாதச் சம்பளம் புத்தாண்டினை முன்னிட்டு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. சம்பளம் இம்முறை காசோலையாக வழங்கப்பட்டதால் பெரும் சிரமத்தின் மத்தியில் அதனை பலரும் மாற்றவேண்டி இருந்தது.

[இ-126]

## சுகாதார மேற்பார்வையாளர்

காங்கேசன்துறை ஏப்ரல் 12

அகதி முகாம்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கென பல இடங்களிலும் சுகாதார மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அகதி முகாம்களின் பலவிதமான தொற்றுநோய்கள் ஏற்படுவதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து. இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[இ-த-68]

## மூளைக் காய்ச்சலால் சிசு மரணம்

தென்மராட்சி, ஏப்ரல் 12

மூளைக்காய்ச்சல் காரணமாக பத்து மாதக்குழந்தை ஒன்று பலியான சம்பவம் கெற்பலியில் இடம் பெற்றது. பாலசுப்பிரமணியம் ஜசிந்தா என்னும் குழந்தையே மூளைக்காய்ச்சலால் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரணமாகி உள்ளது.

[இ-117]

## பொன்னாலையில் ஷெல், பீரங்கிக்குண்டு

சுழிபுரம், ஏப்ரல் 12

காரைநகர் கடற்படையினரால் ஏவப்படும் பீரங்கிக் குண்டுகளும், ஷெல்களும் பொன்னாலை கிருஷ்ணன் கோவிலை அண்டிய பகுதிகளில் விழுந்து வெடிப்பதால், அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் வழக்கம்பரை அம்மன் கோவிலில் தஞ்சமடைந்துள்ளனர்.

[இ-28]

## கிளிநொச்சி பாடசாலைகள்

தென்மராட்சி, ஏப்ரல் 12

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் பளை உட்பட முதலாம் தவணை விடுமுறைக்காக கடந்த வெள்ளிக்கிழமை [illegible] இவை மீண்டும் மே மாதம் 6 ஆம் திகதி [illegible] பட்டுள்ளது.

[இ-117]

## ஆஸ்பத்திரியில் காவலாளி இல்லை

தென்மராட்சி, ஏப்ரல் 12

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் காவலாளி இல்லை. இதனால் பார்வையாளர்கள் எந்நேரமும் வார்ட்டுக்கு செல்ல முடிகிறது.

இங்கு கடமையாற்றிய காவலாளிகள் ஓய்வு பெற்றுள்ளதால் இந்நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[இ-117]


★ மீண்டும் ஆரம்பமாகின்றது

## புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம்

எழிலகம் முன்பாக,　　யாழ்ப்பாணம்.

91 A/L

பகல் நேர வகுப்பு

DAY CLASS

துரித மீட்டல் வகுப்புகளும்,
வினா - விடை வகுப்புகளும்

| | | |
|---|---|---|
| Physics | — | திரு. நந்தகுமார் |
| Chemistry | — | திரு. சண்முகசுந்தரம் |
| Botany | — | திரு. குணசீலன் |
| Zoology | — | பிரபல ஆசிரியர் |
| Pure / Applied | — | திரு. வெக்டர் / திரு. சந்திரமோகன் |

ஆரம்பம்:- 15-04-1991

திங்கட்கிழமை காலை 9 00 மணி

[சி-5945]


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி: காசாளர்

சம்பளத் திட்டம்:

855—30 x 7 — 40 — 8 = 1385

தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத்திட்டத்துக்கமைவான பதவியில் 2 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் 12வது சம்பளத்திட்டத்திற்கமைவான பதவியில் 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

ஆ. கூட்டுறவுப் பணியாளர் [உயர்தரம்] தராதரப் பத்திரம் / க.பொ.த. [உயர்தரம்] 3 பாடங்களும் அத்துடன் கூட்டுறவுச் சங்கத்தில் காசாளர் / விற்பனையாளர் தொடர்பாக 2 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் [சாதாரண தரம்] தராதரப்பத்திரம் க. பொ. த. [சாதாரண தரம்] கணிதம் / வர்த்தக எண்கணிதம் / எண் கணிதம் / சிங்களம் / தமிழ் மொழி ஆகிய 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தலும், கூட்டுறவுச் சங்கத்தின் வர்த்தகத் தொழிற்பாடுகளில் காசாளர்பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும்.

பதவி: அலுவலக உதவியாளர்.

சம்பளத்திட்டம்:

685—40 x 10 — 15 x 5 = 860

தகைமைகள்:

கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத் திட்டத்துக்கு அமைவான பதவியில் 1 வருடத்துக்குக் குறையாத அனுபவமும் 5 ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

8 ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

இரு பதவிகளுக்குமான பொதுத் தகைமைகள்:

வயது 18 — 40 இற்கு உட்பட்டவர்கள்.

வதிவிடம்: சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.

பிணை: காசாளர் பதவிக்கு காசு, உறுதிப்பிணை வழங்க வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் "பொது முகாமையாளர். கோண்டாவில் / இணுவில் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம் தாவடி கோண்டாவில்" என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ 19-4-1991 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள,
கோண்டாவில்/இணுவில் பொது முகாமையாளர்.
தெ ப.பொ.உ.வி.கூ. சங்கம்,
தாவடி - கோண்டாவில்.

[C/4830]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தமிழ், ஆங்கிலம் Standard Portable தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. பியூடோ என்ரபிறைஸஸ் 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (பஸ் நிலையம் முன்பாக) [சி-4826]

## ரைப்ரைட்டர்கள்

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்தவும், புதிய, பழைய ரைப்ரைட்டர்கள் வாங்கவும், விற்கவும் தமிழ், ஆங்கிலம் [Stencils] வேலைகள் செய்யவும் பியூடோ 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-4827]

## தவறிவிட்டது

ஸ்ரார் கல்வி நிறுவன மாணவன் தம்பித்துரை – நாதனுடைய மூக்குக்கண்ணாடி கனகரத்தினம் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கனகரத்தினம் வீதிச் சந்தியில் அமைந்திருக்கும் ஸ்ரார் கல்வி நிறுவனத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [16330]

## JAFFNA TUTORIAL COLLEGE

யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி 341, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1 - 3 - 1991 தொடக்கம் ஆங்கில, தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகள் நடைபெறுகின்றன. வகுப்புகள் நடைபெறும் நேரம் காலை 8-00 மணி தொடக்கம் 12-00 மணி வரை மாலை 1-00 தொடக்கம் 6-00 மணி வரை. [16329]

## சனி நீராடு

எண்ணெய் தேய்த்து மில்க்வைற் ஒலிவ் தூள் பாவித்துத் தலை முழுகி வர உடல் வெப்பம் சமனடைந்து சுக வாழ்வு கிட்டுகிறது. மில்க்வைற் [சி-5940]

## ஜோதிடம்

உங்கள் எதிர்கால பலனை சரியாக அறிந்து கொள்ள நேரில் வரவும். பலன்கள் நடைபெறாவிடில் பணம் திரும்பப் பெற உத்தரவாதம் உண்டு. ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, [அரசடிச் சந்தி] நல்லூர். [16415]

## நூலகம் இடம் மாற்றம்

மல்லாகம், ஏப்ரல் 12

தெல்லிப்பளையில் இயங்கி வந்த உப அலுவலக பொது நூலகம் பாதுகாப்புக்கருதி மல்லாகம் கோவில் வீதியில் உள்ள சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலையத்தில் தற்போது இயங்கி வருகின்றது. [இ - த - 86]

## சங்கக் கடையில் களவு

வலி கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பராய் சந்தியிலுள்ள கிளையில் களவு போயுள்ளது.

இது தொடர்பாக உரும்பராய், ஊரெழு தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதேசப் பொறுப்பாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [இ-154]

## 144 நிலையங்களில் பரீட்சை

விசேஷ ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 144 நிலையங்களில் இம்மாதம் 23 ஆம் திகதி முதல் மே மாதம் 18 ஆம் திகதி வரை நடத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

# பெருமளவு நாவல் மரங்கள் தினமும் விறகுக்காக தறிப்பு

மானிப்பாய், ஏப்ரல் 12

நாகர்கோவில் மணற்காடு, குடத்தனை போன்ற பகுதிகளில் பெருவாரியான நாவல் மரங்கள் விறகுக்காக தினமும் வெட்டப்பட்டு வருகின்றன.

காய்ந்த மரங்களை மட்டும் விறகுக்காக தறிக்கலாம் என்ற அறிவித்தலைச் சாட்டாகக்கொண்டு பலர் பச்சை மரங்களைத் தறித்து காய விடுகின்றனர். சிலர் வேண்டுமென்றே மரங்களைப் பட்டச் செய்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இப்பகுதிகளில் உள்ள நாவல் மரங்களில் இருந்து பெறக் கூடிய நாவல் பழங்களைக் கொண்டு மதுசாரம் தயாரிக்க முடியும் எனவும், எனவே பயனுள்ள இது போன்ற மரங்களை மக்கள் அழிக்கக்கூடாது எனவும் தமிழீழ ஆய்வு நிறுவனம் கோரியுள்ளது. [இ-90]

## நிவாரணத்துக்கு பயறு

சுன்னாகம்பலநோக்குக்கூட்டுறவுச் சங்க உடுவில் கிளையில் நிவாரணத்துக்கு மைசூர் பருப்புக்குப் பதிலாக பயறு வழங்கப்படுகிறது. [இ-68

# மணமகள் தேவை

சுவிஸில் 7 வருடங்களாகத் தொழில் புரியும், 8 இல் செவ்வாய் தோஷமுடைய, அழகிய மணமகனுக்குப் படித்த, அழகிய, நற்குணமுள்ள மணப்பெண் தேவை. ஜாதகம், மற்றும் புகைப்படத்துடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

"மங்களா சேல்ஸ் சென்ரர்"
கண்டி வீதி, சாவகச்சேரி.
[16293]

# கலை, வர்த்தகக் கல்லூரி
# C. C. A. 91 A/L

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

## DAY CLASS

துரித மீட்டல் வகுப்புகளும்,
வினா - விடை வகுப்புகளும்

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | உதயன் |
| கணக்கியல் | - | ஸ்ரீ |
| வர்த்தகம் | - | இரட்ணம் |
| அளவையியல் | - | பிரபல ஆசிரியர் |
| இந்துநாகரீகம் | - | அருள்நங்கை |
| தமிழ் | - | குழந்தை |

ஆரம்பம்: 12 - 04 - 1991
வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி
[சி/5943]

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் க. செல்லத்துரை

[B.A., Dip - in - Ed., M. A.-Ed ]
[முன்னாள் அதிபர், யாழ்/மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்]

மலர்வு: 01 - 06 - 1942
உதிர்வு: 12 - 04 - 1989

இதயக் கோவில்கள் எத்தனையோ காத்திருக்க
நிரந்தரமாய் அதன் தெய்வம் நீர் என்றே
எண்ண வைத்தீர்.
வாடகைக் கோவிலல்ல எம் இதயம் - பாதி
வழியிலே உம் நினைவைப் பிரிவதற்கு
பாரினிலே நாம் வாழும்வரை - அக் கோவில்
தனில் வாழும் அன்புத் தெய்வம் நீர் அன்றோ.

V. M. K. குடும்பத்தினர்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.
[16373]

# SHAMROCK ACADEMY
## CHUNDIKULI, JAFFNA

PHYSICS - Mr. சௌந்தி
91 — புலங்கள் (Fields)
ஆரம்பம்:- 13 - சனி - 12- 30
92 — பொறியியலும், நீர்நிலையியலும்
ஆரம்பம்:- 14 - ஞாயிறு - 2- 15 p. m

PURE / APP. - Mr. கமலசிங்கம்
91 — சிக்கல் எண்கள், மொத்தல்,
92 — மீதித்தேற்றம், இருபடிச்சமன்பாடு, வேக நேர வரைபு

CHEMISTRY - Mr. செல்வா
91 — பௌதீக இரசாயனம்
ஆரம்பம்:- 13 சனி - 4- 00 p. m.
92 — வெப்ப இரசாயனம்
ஆரம்பம்:- 17 புதன் 6- 15 a. m.
[16409]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## முத்துத்தம்பி சந்தியாப்பிள்ளை

[தபால் அதிபர், திருமலை]

பிறப்பு: 25 - 7 - 1939
இறப்பு: 14 - 3 - 1991

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 13 - 04 - 1991 சனிக்கிழமை காலை 6-00 மணிக்கு சாணிக்கை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காக மன்றாடும்படி உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்.

E 7, தொடர்மாடி,
குருநகர்.
[16412]

# 31 ஆம் நாள் நினைவு



மலர்வு: 14 - 02 - 1978
உதிர்வு: 13 - 03 - 1991

## இ. சறோஜினி மங்களிக்கா

[யா/புனித சாள்ஸ் மகா வித். மாணவி]

அன்புச் செல்வமே!
புழுதியில் புதைக்கப்பட்ட
புஷ்பம் நீ
பாவ உலகில் இருந்து
எமை மீட்க வந்த நாதனின்
புதல்வி நீ.
நித்திய ஜீவனை அடைந்து
நித்தியமாக ஆனந்தம் கொள்ள
உனக்காக ஜெபம் பண்ணுவோம்.

உன் பிரிவால் வாடும்;
அப்பா, அம்மா, அண்ணன்,
அக்காமார், தங்கைமார்,
மாணவிகள், உறவினர்.கள்

B 17, தொடர்மாடி,
குருநகர்.
[16410]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அரச படையின் அத்துமீறல்கள்

பேசாலையில் அகதி முகாமில் தங்கியிருந்த 37 தமிழர்களை, படை அதிகாரிகள் கைது செய்த சம்பவம் குறித்துச் செய்தி வெளியாகியுள்ளது.

கைது செய்யப்பட்ட தமிழர்கள் ஆண்கள். இளைஞர்கள் மட்டுமன்றி நடுத்தர வயதினர், குடும்பஸ்தர்கள், வயதானவர்களும் படை அதிகாரிகளால் பலவந்தமாகக் கூட்டிச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

பேசாலை அகதி முகாமை ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தானிகராலயம் பராமரித்து வருகிறது அந்த ஸ்தாபனத்தின் அதிகாரிகள் முகாமுக்குள் நுழைய வேண்டாம் என்று தடுத்த போதிலும், அதனையும் மீறி, அத்துமீறி, அகதிகளைக் கைது செய்திருக்கிறார்கள் ஸ்ரீலங்காப் படை அதிகாரிகள்!

தமது சொந்த இடங்களில் இருந்தால் உயிர்ப் பாதுகாப்பு இல்லை என்பதால், தாம அரும்பாடு பட்டு உழைத்து தேடிக் கட்டிய வீடுகளையும், சேமித்த உடைமைகளையும் விட்டுவிட்டு அகதி முகாம்களுக்கு ஓடிச் செல்கிறார்கள். உயிர்ப் பாதுகாப்பு ஒன்றைக் கருதியே அவர்கள் முகாம்களை நாடுகிறார்கள்; தஞ்சம் அடைகிறார்கள்;

முகாம்களும் பாதுகாப்பற்றவை என்று ஆகிவிட்டால் அவை இருந்து. இயங்கி என்ன பயன்? தமிழர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கப் படைகளின் இராணுவத் தாக்குதல்கள், கைதுகள், சித்திரவதைகளுக்குப் பயந்தே அவர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் அடைகிறார்கள்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்வதாகக் கூறி, படையினரால் கூட்டிச் செல்லப்படுவோருக்கு என்ன நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. உலகமே அறிந்த விடயம். தெற்கில் இவ்வாறு கூட்டிச் செல்லப்பட்டவர்களில் 8,000 பேர் காணாமற் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாக மனித உரிமை இயக்கங்களின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தெற்கிலேயே நிலைமை இவ்வாறிருந்தால், தமிழ்ப் பகுதிகளில் கேட்க எவரும் இல்லை என்ற நினைப்பில், கொடும் சட்டங்கள் போடும் போர்வைகள் இருக்கும் துணிவில், படையினர் எத்தகைய அடாவடித்தனங்கள், அடாத்துகள், அத்துமீறல்கள் செய்வார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

வீடுகளில் இருப்போர், வீதிகளால் செல்வோர் என்று பாராமல் தமிழர்கள் எல்லோரையும் குண்டு வீசியும், ஷெல் அடித்தும் கொல்வதை விடவும், கைது செய்தும், கூட்டிச் சென்றும் சித்திரவதையும், கொலையும் செய்கிறார்கள்!

சர்வதேச ஸ்தாபனமான ஐ. நா. வின் பொறுப்பில் உள்ள அகதி முகாமுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கவும், அகதிகளைக் கைது செய்யவும் துணிவுள்ள படையினர் வேறு எங்கு தான். எதனைத் தான் செய்யமாட்டார்கள்? ஆனால் இது போன்ற செய்கைகள், ஸ்ரீலங்காப் படையினரின் உண்மை ரூபத்தை வெளி உலகுக்குக் காட்ட உதவும்.

ஆனால் சர்வதேச அமைப்புகளோ, நிறுவனங்களோ தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்பதற்கு பேசாலைச் சம்பவம் ஒரு சிறிய உதாரணம்.

ஸ்ரீலங்கா அரசாங்கமோ அதன் படைகளோ சர்வதேச அமைப்புகளுக்கு மதிப்பளித்துத் தமிழருக்கு நியாயம் வழங்கும் நிலையில் இல்லை என்பதற்கும் இது ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

---

நெருப்புக்காய்ச்சலை தடுக்க

# கிராமங்கள் தோறும் நோய்த்தடுப்பு பிரசார வேலைகள்

கொக்குவில் ஏப்ரல் 12

நெருப்புக் காய்ச்சல் பரவாமல் இருக்க கிராமங்கள் தோறும் நோய்த் தடுப்பு பிரசார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நோயின் அறிகுறிகள் தடுப்புமுறை, சிகிச்சை முறை ஆகியவை பற்றி தற்போது பொது சுகாதார பரிசோதகர்களினால் கிராமங்கள் தோறும் பொதுமக்கள் மத்தியில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொக்குவில் பகுதியில் இது வரை மூன்று விளக்கக் கூட்டங்கள் பொதுமக்களுக்கு நடத்தப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரி கிளினிக்கிற்கு வரும் தாய்மாருக்கும் நெருப்புக் காய்ச்சல் நோய்த் தடுப்பு முறை குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது. [இ-69]

### நோயாளர் பாதிப்பு

தென்மராட்சி, ஏப். 12

சாவகச்சேரி மாவட்டவைத்தியசாலையில் இயங்கிவந்த சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டுவிட்டதால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். [இ-117]

## நயினாதீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு ஷெல்

புங்குடுதீவு-குறிகாட்டுவான் பகுதியில் இரண்டொரு தினங்களில் 40க்கு மேற்பட்ட ஷெல்கள் நயினாதீவில் இருந்து ஏவப்பட்டுள்ளன.

இவை வயல்வெளிகளிலும் குடியிருப்புப் பகுதிகளிலும் விழுந்து வெடித்தன.

இப்பகுதியில் இருந்து பெரும்பாலானோர் வெளியேறி இருப்பதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் வீச்சினால் வீடுகள் சிலவும், கடை ஒன்றும் சேதமடைந்துள்ளன. [இ-131]

## நாளையே சமாதானம் வந்தாலும் மகிழ்ச்சியாம்

கொழும்பு, ஏப்ரல் 12

"நாளையே சமாதானம் ஏற்பட்டாலும் நாம் மகிழ்ச்சி அடைவோம்." பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா முன் கண்டவாறு சொன்னார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடத்தப்பட்ட வாராந்திர செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் ஜெனரல் ரணதுங்கா இதனைத் தெரிவித்தார். [இ-எ]

## காரைநகர் தபால் நிலையம் சுழிபுரத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

காரைநகர் தபால் நிலையம் சுழிபுரம் தபால் நிலையத்தில் தற்போது தற்காலிகமாக இயங்கி வருகிறது.

இத்தபால் நிலையத்தில் உயர் அதிகாரி முதல் சிற்றூழியர் வரை 21 ஊழியர்கள் கடமை புரிகின்றனர்.

இதேவேளை காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் வழக்கம்பரையில் இயங்க ஆரம்பித்துள்ளது. [இ-15]

## ஷியா முஸ்லிம்களுக்கும் பாதுகாப்பு வலயம் நிறுவுக

### ஐ நா. விடம் ஈரான் கோரிக்கை

ஈராக்கின் வடக்குப் பகுதியில் குர்டிஷ் மக்களுக்கு பாதுகாப்பு வலயம் ஒன்று அமைக்கப்படுவது போன்று, ஈராக்கின் தெற்கில் வாழும் ஷியா இன முஸ்லிம் மக்களுக்கும் தனிப் பாதுகாப்பு வலயம் அமைக்கப்படவேண்டும்.

ஈரானிய அரசு முன்கண்ட வேண்டுகோளை ஐ. நா. பொதுச்செயலாளருக்கு விடுத்துள்ளது.

ஈராக் இராணுவத்தின் அடக்கு முறையில் இருந்து குர்டிஷ் மக்களைப் பாதுகாக்க அவர்கள் வாழும் வடக்குப் பிரதேசத்தில் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஐ. நா. அமைக்க வேண்டும் என்ற யோசனையை பிரிட்டன் சமர்ப்பித்துள்ளதும் அதனை ஐ. நா. பாதுகாப்புச் சபை பரிசிலனை செய்து வருவதும் தெரிந்ததையே. [இ-எ]

## தனது யோசனைக்கு பிரிட்டன் ஆதரவு தேடுகிறது

லண்டன், ஏப்ரல் 12

ஈராக்கின் வடக்குப் பகுதியில் குர்டிஷ் இன மக்களுக்கென தனிப் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஐ. நா. அமைக்க வேண்டும் என்ற தமது யோசனையை ஆதரிக்கும்படி சோவியத் யூனியன் மற்றும் சீனா ஆகிய நாடுகளை பிரிட்டன் கோரியுள்ளது.

குர்டிஷ் பாதுகாப்பு வலயம் யோசனைக்கு அமெரிக்கா பூரண ஆதரவு வழங்குவதாகவும் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் சோவியத் யூனியன் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தலைவர்களிடம் தெரிவித்து உள்ளார். [இ-எ]

## இராணுவ நடவடிக்கைக்கு எதிராக அமெ. எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப். 12

குர்டிஷ் இன மக்கள் வாழும் ஈராக்கின் வடக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று பக்தாத் அரசை அமெரிக்கா நேற்று எச்சரித்தது.

அப்பிரதேச வான்பிராந்தியத்தில் போர் விமானங்கள் பறப்பதை உடனடியாக நிறுத்தும்படியும் ஈராக்கிற்கு வாஷிங்டன் அரசு எச்சரித்துள்ளது.

குர்டிஷ் இன அகதி மக்களின் துயர் துடைப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஈராக்கின் இராணுவ நடவடிக்கைகள் இடைஞ்சலாக உள்ளன என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது. [இ-எ]

# சிங்கள - தமிழ் மக்கள் இணைந்து வாழ்வது என்பது இயலாத காரியம்

### சோதிட நோக்கில் 'விவாகரத்து' அவசியம்

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல், இராணுவ நடவடிக்கைகளை மாறி மாறி மேற்கொண்டு வந்த இலங்கை அரசு, ஜூன் மாதத்தின் பின்னர் புதிய அணுகு முறையை கையாள எண்ணியுள்ளதாக, ஜனாதிபதியின் பேச்சுக்களில் இருந்து தெரிய வருகின்றது.

இந்த நிலையில் இலங்கையில் தமிழ், சிங்கள மக்கள் ஒற்றுமை எவ்வாறு அமையும் என்பதனை சோதிட ரீதியாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிக் கூற வந்த சோதிடர்கள் பலர், இலங்கையின் இராசி கும்பம் எனக் கொண்டே ஆய்வு செய்துள்ளனர். இலங்கை 4 - 2 - 1948 அதிகாலை 7-35 மணிக்குச் சுதந்திரம் பெற்றதை வைத்தே அப்படிக் கொள்கின்றனர்.

1310 ஆம் ஆண்டளவில் எழுதப்பெற்ற சரசோதி மாலை என்ற நூலில் இலங்கையின் இராசி துலாம் என்றே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் இராசி துலாமெனில் —

சிங்கள மக்களின் இராசி— துலாம்:

இராசி அதிபதி — வெள்ளி

உச்சக் கிரகம் — சனி

சத்துருஸ்தான இராசி — மீனம்.

ஆட்சிக் கிரகம் — வியாழன்.

சிறுபான்மை இனத்திற்குரிய இராசி — தனு

அதன் ஆட்சிக் கிரகம் — வியாழன்.

தமிழ் மக்களின் இராசி — தனு

ஆட்சிக் கிரகம் — வியாழன்.

சத்துருஸ்தான இராசி — இடபம்.

உச்சக் கிரகம் — சந்திரன்.

ஆட்சிக் கிரகம் — வெள்ளி.

அ. இவற்றை உற்று நோக்குகின்ற போது— சிங்கள இனத்திற்குரிய இராசி அதிபதியான வெள்ளி [அசுரகுரு] தமிழ் இனத்தின் சத்துருஸ்தானாதிபதியாக உள்ளார்.

அவ்வாறே தமிழ் இனத்தின் இராசி அதிபதியான வியாழபகவான் [தேவகுரு] சிங்கள இனத்தின் சத்துருஸ்தானாதிபதியாக உள்ளார்.

#### துளபகிரி சோதிடர்

ஆ. சிங்கள இனத்தின் இளைய சகோதர ஸ்தானாதிபதியான வியாழபகவானே, அவ்வினத்தின் சத்துருஸ்தானாதிபதியாகவும் இருப்பதனால் எந்தக் காலத்திலும் தமிழ் இனத்தை சிங்கள இனம் அன்புடன் அரவணைப்பது சாத்தியமானதல்ல என்பது சோதிட ரீதியாகப் புலப்படும்.

இ. அவ்வாறே, தமிழ் இனத்தின் மூத்த சகோதர ஸ்தானாதிபதியான வெற்றி பகவான் [11 ஆம் இடம் துலாம்] தமிழ் இனத்தின் சத்துருஸ்தானாதிபதி [6 ஆம் இடம் இடபம்] யாகவும் உள்ளார்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து—

[I] சிங்கள இனத்தின் இராசி அதிபதியான வெள்ளி தமிழ் இனத்தின் சத்துருஸ்தானாதிபதி.

[II] தமிழ் இனத்தின் இராசி அதிபதியான வியாழன் சிங்கள இனத்தின் சத்துருஸ்தானாதிபதி.

[III] சிங்கள இனத்தின் இளைய சகோதர ஸ்தானாதிபதி [தமிழர்] சிங்கள இனத்தின் சத்துருஸ்தானாதிபதியாகவும் உள்ளார்.

[IV] தமிழ் இனத்தின் மூத்த சகோதர ஸ்தானாதிபதி வெள்ளி, தமிழ் இனத்தின் சத்துருஸ்தானாதிபதியாகவும் உள்ளார்.

இவற்றின் விளைவால் சிங்கள-தமிழ் இனங்கள் ஆண்டாண்டு காலமாக விரோதிகளாகவே இருந்து வருகின்றனர். யுத்தம் நடந்து கொண்டே இருக்கின்றது. யுத்தம் இராவணன் காலத்தில் இருந்தே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதிலிருந்து நாம் ஒன்றை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. சிங்கள-தமிழ் மக்களது உறவானது சிறிதளவும் பொருத்தமற்ற தம்பதிகளது சேர்க்கை போன்ற ஒன்றாகவே உள்ளது. இரண்டு இனங்களையும் நிரந்தரமாகச் சேர்த்து வைக்க மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் பலனளிக்கமுடியாது.

அவ்வாறே ஓர் இனத்தை மற்றோர் இனம் அழிப்பதும் அல்லது அடக்குவதும் இயலாத காரியமாக இருக்கும்.

ஒத்துப்போக முடியாத தம்பதிகளுக்கு விவாகரத்து எவ்வளவு அத்தியாவசியமும் வரப்பிரசாதமாகவும் அமைகிறதோ அது போல இரண்டு இனங்களும் பிரிந்து வாழ்வது தமிழ் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய இரு சாராருக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

பூரண இறைமை உள்ள சுயாட்சி அதிகாரத்தை தமிழ் மக்களுக்கு வழங்குவது சிறந்தவொரு பரிகாரத்த விவாகரத்து நடவடிக்கையாக இருக்கலாம். அல்லாமல் தமிழினத்தின் கஷ்டமான காலத்தை சோதிட ரீதியாகக் கணித்து அனுமானித்து அதற்கேற்ப இராணுவ, அரசியல் நடவடிக்கைகளை மாறி மாறி மேற்கொள்ளும் இலங்கை அரசின் நடைமுறை தொடருமானால் இலங்கை அரசுக்குப் பாதகமான காலங்களில், இலங்கை அரசும் பாரிய இழப்புக்களை சந்திக்க வேண்டி ஏற்படும்.

என்ன நடக்கும் என்பதை விட நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையே சோதிடம் அதிகம் வலியுறுத்துகிறது.

பிறக்கப் போகின்ற பிரசோற்பத்தி ஆண்டிலாவது கொழும்பில் ஆட்சியில் உள்ளவர்கள் சரியான வழி சிந்திக்கத் தொடங்க வேண்டும். பிறக்கும் புதிய ஆண்டு பிரஜைகள் அழிவு ஆண்டாக மாறாது பிரசோற்பத்தி ஆண்டாகவே மலரட்டும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட சுபநேரங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 12

தமிழரின் சித்திரைப் புதுவருடம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிறக்கிறது. வருடம் பிறக்கும் நேரம், புண்ணிய காலம், கைவிசேஷம் வழங்கும் நேரம், வியாபாரம் மற்றும் தொழில் தொடங்கும் நேரம் என்பன புதுவருடத்தை யொட்டிய முக்கிய வருடப் பிறப்புக் கருமங்களாகும்.

அவை குறித்து வாக்கிய பஞ்சாங்கமும், திருக்கணித பஞ்சாங்கமும் கணித்து வெளியிட்டுள்ள நேரங்களை வாசகர் நலன் கருதி இங்கு தருகிறோம்.

**வாக்கிய பஞ்சாங்கப்படி :**

ஞாயிற்றுக்கிழமை [14-4-91] காலை 7 மணி 22 நிமிடத்திற்கு பிரசோற்பத்தி சித்திரைப் புதுவருடம் பிறக்கின்றது. சனிக்கிழமை இரவு 3 மணி 22 நிமிடம் முதல் ஞாயிறு முற்பகல் 11 மணி 22 நிமிடம் வரையில் புண்ணிய காலமாகும்

**கைவிசேஷம் :**

திங்கட்கிழமை [15-4-91] —
காலை 9-10 மணிமுதல் 9-47 மணிவரை
நண்பகல் 1-07 மணிமுதல் பிற்பகல் 2-06 மணிவரை

புதன்கிழமை [17-4-91] —
காலை 6-04 மணிமுதல் 7-37 மணிவரை

**திருக்கணித பஞ்சாங்கப்படி :**

ஞாயிற்றுக்கிழமை [14-4-91] முற்பகல் 10 மணி 04 நிமிடத்தில் ''பிரஜாபதி'' என்னும் பெயருடைய புது வருடம் பிறக்கின்றது. அன்று காலை 6-04 மணிமுதல் பிற்பகல் 2-04 மணிவரை புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலம் மருத்துநீர் வைத்து நீராடுதல், வழிபாடியற்றுதல், தானதருமஞ் செய்தல், விருந்தினரை உபசரித்தல் முதலியன செய்வதற்கு உகந்ததாகும்.

**கைவிசேஷம் :**

திங்கட்கிழமை [15-4-91] —
காலை 6-04 — 7-16
பகல் 12-04 — 12-52
பி.பகல் 2-28 — 3-40

மேற்கூறிய நேரங்களில் வியாபாரம் ஆரம்பிக்க, தொழில் தொடங்க, ஏர் பூட்ட, விருந்துண்ண, வித்திவாரம்பம் முதலியன செய்யச் சிறந்ததாகும். வருஷப் பிறப்புத் தினத்தன்று அமாவாசை வியாபித்திருப்பதால் அன்று எக்கருமமும் ஆரம்பித்தல் கூடாது. [அ]

# பஞ்சாப், அஸாமிலும் தேர்தல்; சந்திரசேகர் விஷப் பரீட்சை!

புதுடில்லி, ஏப். 18

இந்தியா நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் நடக்கும் அதே காலத்தில் அஸாம் மற்றும் பஞ்சாப் மாநிலங்களிலும் லோகசபை மற்றும் சட்டசபைத் தேர்தல்களையும் நடத்தும்படி மத்திய அரசாங்கம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சிபார்சு செய்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்றை பிரதமர் சந்திரசேகர், தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷனுக்கு நேற்று அனுப்பிவைத்தார்.

அதற்கு முன்னர் திரு. சந்திரசேகர் ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

தீவிரவாதிகளின் கை ஓங்கியிருக்கும் பஞ்சாபிலும், அஸாமிலும் வழமை நிலை ஏற்பட முன்னர் தேர்தல் நடத்த முயற்சிக்கும் பிரதமர் சந்திரசேகரின் நடவடிக்கை ஒரு விஷப் பரீட்சையாக அமையும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இதே வேளை—

இந்திரா காங்கிரஸ் கட்சி பஞ்சாப், அஸாம் மற்றும் ஜம்மு - காஷ்மீர் மாநிலங்களில் லோகசபை மற்றும் சட்டசபைத் தேர்தல்களை நடத்த வேண்டாம் என்று தேர்தல் ஆணைக்குழுவைக் கோரியுள்ளது. [உ-எ]

## கீரிமலை வாசி படையினரிடம் சிக்கினார்

யாழ்ப்பாணம். ஏப் 12

கீரிமலைப் பகுதியிலுள்ள தமது தோட்டத்தைப் பார்வையிடச் சென்ற ஒருவர் நேற்று படையினரிடம் சிக்கிக்கொண்டார்.

மயிலங்கூடல் வாசியான இவர் தமது மகளுடன் சென்றிருந்தாராம்.

அப்போது படையினர் வேட்டுக்களைத் தீர்த்து அவர்களை நிற்கும்படி எச்சரித்தனராம்.

அப்படி இருந்த போதும் மகள் ஓடித் தப்பி வந்துவிட்டார் என்றும் தந்தை படையினரிடம் சிக்கிவிட்டார் என்றும் கூறப்பட்டது. [ஓ15]

## மீண்டும் ஈராக் படை தாக்கு

தெஹ்ரான், ஏப். 12

அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி ஈராக் இராணுவம் மீண்டும் குர்டிஷ் கெரில்லாக்கள் மீது தாக்குதலை ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஈராக் வடக்குப் பகுதியில் உள்ள குர்டிஷ் எண்ணெய் நகர் கிர்க்குக்கில் இருந்து 50 மைல் தொலைவில் உள்ள சலாகுதீன் நகரில் அத் தாக்குதல் இடம்பெற்றதாக பி. பி. சி. அறிவித்தது.

அச் சண்டையில் ஈராக் இராணுவத்தின் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவும்—

கடும் சண்டையின் பின்னர் ஈராக் இராணுவம் அப் பகுதியில் இருந்து துரத்தப்பட்டதாகவும் பி.பி.சி. கூறியது.

பி. பி. சி. செய்தியாளர் அப்பகுதிக்கு விஜயம் செய்த போது அங்கு கடும் சண்டை இடம்பெற்றதற்கான தடயங்கள் காணப்பட்டன என்று கூறப்பட்டது. [ஓ-எ]

## ஐ. நா. அமைதிப் படை இன்று குவைத் செல்கிறது

குவைத் — ஈராக் எல்லையைக் கண்காணிக்கும் பொருட்டு ஐ. நா. அமைதி காக்கும் படை இன்று [வெள்ளி] குவைத் போய்ச் சேரும் என்று ஐ. நா. அதிகாரிகள் கூறினார்கள்.

குவைத் — ஈராக் எல்லையில் பணிபுரிய உள்ள ஐ. நா. அமைதி காக்கும் படையில் சேர்ந்து பணிபுரிய வீரர்களை அனுப்பி வைக்கும்படி இந்தியா. மலேசியா உட்பட 32 நாடுகளை ஐ. நா. பொதுச் செயலாளர் கேட்டிருக்கிறார்.

இதேவேளை - வளைகுடாப் போரில் முறையான நிரந்தர யுத்த நிறுத்த அறிவிப்பை ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்று வெளியிடுவதாக இருந்தது. [ஓ-எ]

# யுத்த நிறுத்தம் செய்ய அரசிடம் கோரிக்கை

வடக்கு - கிழக்குப் பகுதியில் உடனடியாக போர் நிறுத்தஞ் செய்து இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் படி இந்து அமைப்புகளின் கவுன்ஸில் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள். ஏராளமான வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

பத்து லட்சத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

—இப்படி இந்து அமைப்புகளின் கவுன்ஸில் கூறியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதும் உணவு, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டுள்ளதையும் இந்து அமைப்புகளின் கவுன்ஸில் சுட்டிக்காட்டி உள்ளது. [அ-எ]

## 7 படையினர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 12

கிழக்கு மாகாணம், தொப்பிகலைப் பகுதியில் விடுதலைப் புலிகளுடனான சண்டையில் கொல்லப்பட்ட அரசுப் படையினரின் எண்ணிக்கை ஏழு என்று கொழும்பின் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-எ]

## யாழ். வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 12

வடக்கே வர முடியாமல் வவுனியாவில் கடந்த சில தினங்கள் தங்கியிருந்த பல நூற்றுக்கணக்கானோர் நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். [ஓ-15]

## வெளிவிவகார ஆய்வுக்குழு

கொழும்பு, ஏப்ரல் 12

வெளிவிவகார ஆய்வுக் குழு ஒன்றை ஜனாதிபதி பிரேமதாஸா நியமித்திருக்கிறார்.

இக் குழுவின் தலைவராக டாக்டர் காமினி கொரியா இருப்பார்.

பத்திரிகையாளர் மெர்வின் டி சில்வா, வழக்கறிஞர் லக்ஷ்மன் கதிர்காமர், கம்பெனிப் பணிப்பாளர்கள் எல். ஜெயவர்த்தனா, எஸ். கே. விக்ரமசிங்கா, டாக்டர் எஸ். டபிள்யு திஸநாயக்கா திரு. ஜி. சி. ஈ. டி. விஜேசிங்கா ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

இலங்கையின் தேசிய நலன்களில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சர்வதேச ரீதியில் ஏற்படும் நடப்பு மாற்றங்களை இந்தக் குழு ஆராயும்.

## வங்கிகளுக்கு பணம்

யாழ்ப்பாணம், ஏப். 12

இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் ''லில்லி லில்லி'' கப்பலில் மக்கள் வங்கிக்கு மூன்று கோடி 50 லட்சம் ரூபா கொண்டுவரப்படும்.

அதே வேளை அடுத்த வாரம் வர இருக்கும் 'லங்கா'சிறி கப்பலில் இலங்கை வங்கிக்கும், மக்கள் வங்கிக்கும் தலா மூன்று கோடி 50 லட்சம் ரூபா வந்து சேரும் என வங்கி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. [அ-15]

# சுவீடிஷ்பல்கலைக்கழகத்தில் தமிழர் சமய நெறி ஆய்வு

யாழ்ப்பாணம், ஏப், 12

தமிழரின் சமய நெறிச் சிந்தனை பற்றி ஆய்வு மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் சுவீடனில் உள்ள உப்சால் பல்கலைக்கழகத்துக்குச் செல்வார்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறையுடன், உப்சால் பல்கலைக்கழகம் ஏற்படுத்திக் கொண்ட இணைப்புத் திட்டத்தின் கீழ் இந்த ஆய்வு நடைபெறும்.

இந்த ஆய்வுக்குரிய சகல செலவுகளையும் உப்சால் பல்கலைக்கழகமே பொறுப்பேற்கும்.

இந்து — கிறிஸ்தவ நாகரிகங்கள், தமிழ் மொழிக்கும் சமயங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு, வளர்ச்சிகள் பற்றிய ஆய்வை மேற்கொள்ள அந்த பல்கலைக் கழகம் முன்வந்துள்ளது. யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து செல்லும் பேராசிரியர் அந்த ஆய்வுகளுக்கு அனுசரணையாக இருந்து வழி நடத்துவார். [அ-3]

## மகனால் வெட்டுண்டவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 12

சித்த சுவாதீனமுற்றவர் எனக் கூறப்படும் மகனால் மண்வெட்டியால் வெட்டுண்ட தந்தை ஒருவர் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கடந்த 5 ஆம் திகதி வெட்டுண்டவரான இவர் கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா நாகரத்தினம் [55 வயது] என்பவர் ஆவார். [ஒ-15]

## திருமலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைத்து அங்கு குடியேறுவோருக்கு இலவசமாக வீடு, வாசல்களை வழங்குதல்.

★ குடியேற்றவாசிகளுக்கு விசேட நிவாரண உதவிகளையும், குடிதண்ணீர் வசதிகளையும் வழங்குதல்

★ மீன்பிடி உபகரணங்கள், வள்ளங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்குதல்

★ குடியேற்றக் கிராமங்களில் ஊர்காவற்படை மற்றும் பாதுகாப்புப் படை மூலம் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

— மேற்கூறிய நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் இணைந்து செய்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பூர், கூனித்தீவு போன்ற தமிழரின் பாரம்பரிய மீனவப் பிரதேசங்களில் அவ்வப்போது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு, அங்கிருந்து தமிழ் மீனவர்களை விரட்டியடிக்கவும்—

அப்பகுதிகளில் சிங்கள மீனவரைக் குடியேற்றவும் பாதுகாப்புப் படை மூலமும், ஊர்காவல் படை மூலமும் 'சதி' நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-5]

## இன மோதல்...

உத்தியோகபூர்வமாகக் கேட்டுக் கொண்டது.

இந்தியாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் திரு. திக்விஜயசிங் தம்மைப் புதுடில்லியில் சந்தித்த இலங்கையின் வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் திரு. பேர்னாட் திலகரத்னாவிடம் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இந்த விடயம் குறித்து தமது நாட்டு அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் —

விரைவில் சுமுகமான தீர்வு ஏற்படும் எனத் தமது அரசு நம்புவதாகவும் திரு. திலகரத்னா பதிலளித்தார் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [உ-5

# தினசரி ஆயிரம் அகதிகள் குளிர், பட்டினியால் மரணம்!

லண்டன், ஏப். 12

துருக்கியுடான எல்லையில் உள்ள மலைப்பிரதேசங்களில் தஞ்சமடைந்துள்ள லட்சக்கணக்கான குர்டிஷ் அகதிகளில் தினமும் குறைந்தது ஆயிரம் பேராவது குளிர் மற்றும் பட்டினி காரணமாக இறப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை— பதினொரு லட்சத்து பத்து ஆயிரம் குர்டிஷ் மக்கள் அகதிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று ஐ. நா. அகதிகள் தூதர் அறிவித்துள்ளார்.

இவர்கள் தங்குவதற்குத் தேவையான கூடார வசதிகளை செய்து கொடுக்கமட்டும் 40 கோடி டொலர் தமக்குத் தேவைப்படுவதாக ஐ. நா. அகதிகள் தூதர் அறிவித்திருக்கிறார். [இ-எ]

## கொழும்பில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப் 12

இலங்கை நிர்வாக சேவை விசேட பரீட்சையில் சித்தியடைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சையும் பயிற்சிக் கருத்தரங்கும் எதிர் வரும் 18 ஆம் திகதியிலிருந்து இரு வாரங்களுக்கு கொழும்பில் [illegible] நடைபெறவுள்ளது. [ஒ-5]

## அடம்பன்...

தாக்குதல்களைத் தொடுத்தபடி இருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்த மோதலின் போது இராணுவத்தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விவரங்கள் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் 2 ஆவது லெப்டினன்ட் துரைக்குட்டி, நாயகன், விஜயன் ஆகிய மூன்று போராளிகளும் வீரமரணமடைந்தனர்.

இதேவேளை—

நானாட்டானில் நின்ற இராணுவத்தினர் முருங்கனை நோக்கி முன்னேற முயன்று வருகின்றனர் என்றும்—

அவர்களை ஆண்டார் செட்டி என்ற இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 [illegible] கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 04 - 1991 இல் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org